**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 293/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | இம்முடி குமார காங்கேய மன்றாடியார் |
| Father Name | : | அமராவதி காங்கேய மன்றாடியார் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 35 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பஞ்சாப் நேஷனல் வங்கி கிளையில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2023 ஆம் தேதியன்று காலை 11 மணியளவில் கள்ளக்குறிச்சி வங்கி கிளை மேலாளராக பணியில் இருந்தபோது எனது மச்சான் பரமேஷ் எனக்கு போன் செய்து எனது அப்பா அவரது இருசக்கர வாகனத்தில் சம்பந்தம்பாளையத்தில் இருந்து கோவை மெயின்ரோட்டை கடக்கும்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த மாருதி எர்டிகா கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தில் தலை மற்றும் காலில் பலத்த அடி பட்டதாகவும், அதன் பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தாகவும், பின்னர் எனது அறிவுறுத்தலின் பேரில் கோவை ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் அதன் பின்னர் எனது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் எனக்கு தகவல் சொன்னார். நான் அன்றைய தினம் சுமார் 4.00 மணியளவில் ராயல் கேர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் நான் அன்றயை தினம் ஊதியூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று நான் கேட்டு தெரிந்துகொண்டேன். விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு வயது சுமார் 70 க்கு மேல் இருக்கும் என்றால் 70 க்குள் இருக்கும். விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது அப்பா தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடக்க முயற்சி செய்தபோது விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். விபத்தானது யாருடைய அஜாக்கிரதையால் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 18:46:53 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 293/2023 |
| Deposition of Witness | : | PW- 2 |
| Name | : | பரமேஷ்வரன் |
| Father Name | : | பாலசுப்பரமணி |
| Village | : | காங்கேயம்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 45 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 16.07.2023 ஆம் தேதியன்று காலை 11 மணியளவில் எனது சித்தப்பா அவரது இருசக்கர வாகனமான XL வாகனத்தில் சம்பந்தம்பாளையத்தில் இருந்து கோவை மெயின்ரோட்டை கடக்கும்போது கிழக்கில் இருந்து மேற்காக வந்த மாருதி எர்டிகா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் எனது உறவனிர் தகவல் சொன்னார். விபத்தில் எனது சித்தப்பாவிற்கு அவரது தலை மற்றும் காலில் பலத்த அடிபட்டு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று நான் கேட்டு தெரிந்துகொண்டேன். எனது சித்தப்பாதான் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடக்க முயற்சி செய்தபோது விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். விபத்தானது யாருடைய அஜாக்கிரதையால் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி

பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 18:47:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்